No. of Printed Pages : 7

6925028

**6801**

பதிவு எண் | 1 | 7 | 8 | 4 | 0 | 8 | 6 |

# தமிழ் - முதல் தாள்

# Language – Part I – TAMIL – Paper I

**(செய்யுள், உரைநடை)**

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பென்சில் பயன்படுத்தவும்.

**குறிப்பு :** (i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் **49** -க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அடிபிறழாமல் அமைதல் வேண்டும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

## பகுதி - 1

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **6x1=6**

**1.** 'இணையில்லை முப்பாலுக்கு இந் நிலத்தே' எனப் பாடியவர் ________ .

(அ) பாரதியார் (ஆ) சுரதா (இ) பாரதிதாசன்

**2.** இளங்கோவடிகள் ________ நாட்டைச் சேர்ந்தவர்.

(அ) சோழ (ஆ) சேர (இ) பாண்டிய

[ திருப்புக

3. ‘நல்’ என்னும் அடைமொழி பெற்ற நூல் _________ .

(அ) அகநானூறு (ஆ) கலித்தொகை (இ) நற்றிணை.

4. ‘உலகம்’ என்னும் தமிழ்ச்சொல் _________ என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது.

(அ) உலகு (ஆ) உலவு (இ) உளது

5. ‘தமிழ்த்தென்றல்’ எனச் சிறப்பிக்கப்படுபவர் _________ .

(அ) பேரறிஞர் அண்ணா (ஆ) மு. வரதராசனார் (இ) திரு.வி.க.

6. வள்ளலாரின் இயற்பெயர் _________ .

(அ) சம்பந்தர் (ஆ) இராமலிங்கர் (இ) தாயுமானவர்

## பகுதி - 2

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** **6x1=6**

7. சேக்கிழார் பெருமான் அருளியது _________ .

8. ‘உழுவை’ என்பதன் பொருள் _________ .

9. நால்வகைப் பாக்களும் வயலுக்கு _________ அமைந்துள்ளன.

10. பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி எனக் கூறியவர் _________ .

11. படப்பிடிப்புக் கருவியை _________ பொருத்துவதும் உண்டு.

12. சங்க காலத்தில் பெண்கள் _________ கடந்து செல்லக் கூடாது.

## பகுதி - 3

**III. பொருத்துக.** **4x1=4**

13. இடர் - குப்பைகூளம்
14. இறை - மூங்கில்
15. பணை - துன்பம்
16. செத்தை - தலைவன்

## பகுதி - 4

**IV. விடைக்கேற்ற வினா அமைக்கவும்.** **4x1=4**

17. அம்பேத்கர் இந்தியா திரும்பிய பின் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார்.

18. இலெமூரியாவை மனித நாகரிகத் தொட்டில் என்பர்.

19. பெரியார் பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார்.

20. இளைஞர்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், தெய்வப்பற்றும் வளரும் வகையில் கல்வி அமைதல் வேண்டும்.

## பிரிவு - II

(மதிப்பெண்கள் : 20)

## பகுதி - 1

V. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தினுக்கு மூன்று** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **5x2=10**

21. 'ஞாலம் கருதினும் கைகூடும்'. எப்போது ?

22. 'ஏலாதி' நூற்குறிப்பு எழுதுக.

23. குகன் இராமனைக் கண்டு எவ்வாறு பணிந்து வணங்கினான் ?

[ திருப்புக

24. அப்பூதியடிகள் எத்தகைய பண்பாளர் ?

25. போலிப்புலவர்களைத் தண்டிப்போர் யாவர் ?

26. நல்லார் தொடர்பு கைவிடல் எத்தன்மைத்து ?

27. குலசேகரர் எவ்வெம் மொழிகளில் வல்லவர் ?

## பகுதி - 2

VI. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தினுக்கு மூன்று** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **5x2=10**

28. உலகில் உள்ள மொழிகளுள் இலக்கிய, இலக்கண வளமுடைய மொழிகள் எத்தனை ?

29. கல்விப் படங்களின் வாயிலாக நாம் அறிவன யாவை ?

30. ஏற்றுமதி இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை ?

31. கண்ணிடந்து அப்பியவர் யார் ? அவர் வரலாறு உணர்த்தும் செய்தி யாது ?

32. காந்தியடிகள் எதனைப் பாவம் என்கிறார் ?

33. இராமலிங்கர் எங்கு, எப்பொழுது பிறந்தார் ?

34. ஒவ்வொருவரும் குறைந்தது எக்கல்வித் தகுதியினைப் பெறுதல் வேண்டும் ?

## பிரிவு - III

(மதிப்பெண்கள் : 24)

### பகுதி - 1

VII. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் மூன்றினுக்கு ஆறு** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **3x4=12**

35. சிலப்பதிகாரம் காட்டும் சோழநாட்டு மன்னர்களின் சிறப்புகள் யாவை ?

36. விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை ?

37. தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல்வழித் தொகுத்து எழுதுக.

38. ''சீறாப்புராணம்'' – குறிப்பு எழுதுக.

39. ''சாதனைப் பூக்கள்'' என்று எவற்றை இளந்திரையன் சுட்டுகிறார் ?

### பகுதி - 2

VIII. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் மூன்றினுக்கு ஆறு** வரிகளுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **3x4=12**

40. பெண்ணுரிமையை விளக்குக.

41. அம்பேத்கர் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை ?

42. பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும் ?

43. கடல் வாணிகம் குறித்து எழுதுக.

44. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது ? விளக்குக.

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 10)

**IX.** கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும். **5x1=5**

**45.** பாத்தனதாக் கொண்டபிள்ளைப் பாண்டியன் வில்லி ஒட்டக்
கூத்தனிவர் கல்லாது கோட்டிகொளும் - சீத்தையரைக்
குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம்
வெட்டிக் களைபறிக்க மேலாய்த்தூர் - கட்டி

(i) இப்பாடல் இடம் பெற்ற நூல் எது ?

(ii) 'செவியறுத்து' - பிரித்தெழுதுக.

(iii) போலிப் புலவர்களின் தலையில் குட்டுபவர் யார் ?

(iv) 'சீத்தையர்' - பொருள் கூறுக.

(v) இப்பாடலில் பயின்று வந்துள்ள அடி எதுகைகளை எழுதுக.

**46.** கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும். **5x1=5**

''ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்னும் வள்ளுவர் வாய்மொழியை நன்குணர்ந்தவர் பெரியார். ஒரு நாடு வளத்துடன் இருக்க வேண்டுமானால், அந்நாட்டு மக்கள் அனைவரும் ஒத்த ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும். ஒழுக்கமென்பதும், கற்பென்பதும் பெண்களுக்கு மட்டும் என்றில்லாமல் ஆண், பெண் இருபாலர்க்கும் பொதுவாகும் என்பது அவர்தம் கருத்து.

பெரியார், சமூக முரண்களையும் மூடக்கருத்துகளையும் எதிர்த்தவர் ; தொலைநோக்குப் பார்வையுடையவர் ; பகுத்தறிவுக்குப் பொருந்தாதவற்றை அறுத்து எறிந்தவர் ; சமூக மாற்றத்தை விரும்பியவர் ; பெண்களே சமூகத்தின் கண்கள் எனக் கருதியவர் ; பெண்களை அடிமைத்தளையிலிருந்து மீட்டவர். பெரியார் வழிகாட்டுதலால், தமிழகம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது.

**வினாக்கள் :**

(i) இரு பாலருக்கும் பொதுவானவை என்று கருதப்படுபவை யாவை ?

(ii) பெரியார் எவற்றை எதிர்த்தார் ?

(iii) பெரியார் பெண்களை எவ்வாறு உயர்த்திக் கூறியுள்ளார் ?

(iv) பெரியார் ___________ பார்வையுடையவர்.

(v) மக்கள் எப்படி இருந்தால் நாடு வளமாகும் ?

## பிரிவு - V

(மதிப்பெண்கள் : 26)

### பகுதி - 1

X. கீழ்க்காணும் வினாக்களுக்குப் **பத்து வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **2x8=16**

**47.** (அ) ஒழுக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**அல்லது**

(ஆ) வாழ்க்கையில் அனைவரும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் பற்றிக் கலித்தொகைப் பாடல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

**48.** (அ) செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாடுகளை விளக்கி எழுதுக.

**அல்லது**

(ஆ) கலை அறிவியல் கல்வி, சிறுதொழில் கல்வி குறித்து விவரிக்கவும்.

### பகுதி - 2

**49.** செய்யுள் வடிவில் விடை தருக. **2+2+6=10**

(அ) 'நன்றிக்கு' - எனத் தொடங்கும் குறள்.

(ஆ) 'வினை' - என முடியும் குறள்.

(இ) 'வாயிற் கடைமணி' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

-o0o-